## 7.1.9 Sensitization of students and employees of the Institution to the constitutional obligations: values, rights, duties and responsibilities of citizens

### NASHA MUKT BHARAT ABHIYAAN

In a collaborative effort between Holy Cross College, Thiruppumunai, and the District Social Welfare Department, a significant initiative was launched to combat the growing issue of addiction in the community. Led by Fr. Francis Xavier Nelson, a priest from the Kottar Diocese with expertise in addiction counseling, the Addiction Treatment Ministry was established to address the widespread challenges faced by individuals and families struggling with addiction.

Recognizing the alarming prevalence of addiction-related issues, particularly alcoholism, within local communities, the Thiruppumunai Addiction Treatment Ministry (TATM) of Kottar Diocese has been actively advocating for a "Drug-free Society." Through extensive outreach efforts across various demographics, regardless of caste, creed, culture, or region, TATM aims to liberate individuals from the grip of addiction through education, awareness, and support.

Under the guidance of Dr. Fr. Nelson, several certificate courses were conducted between 2010 and 2018, targeting counselors, educators, healthcare professionals, and social workers. These courses were meticulously designed to address the evolving needs of the community, covering topics from alcoholism counseling to mental health awareness.

Building on the success of these programs, Holy Cross College expressed interest in extending their collaboration with Thiruppumunai to offer diploma courses aimed at empowering individuals from diverse backgrounds. The inaugural "Human Developmental Stage Counseling Diploma Course" held in 2019 marked the beginning of this joint endeavor, facilitating knowledge dissemination on the psychosocial and biological aspects of human development.

Despite the challenges posed by the COVID-19 pandemic, Thiruppumunai continued its mission of service, providing essential support to individuals in need while adhering to safety protocols. Dr. Fr. Nelson's exemplary dedication and expertise earned him recognition as a District Member of the NASHA MUKT BHARAT ABHIYAAN, further amplifying the impact of his efforts to promote a drug-free India.

Drawing inspiration from the words of Pope Francis, both Thiruppumunai and Holy Cross College remain steadfast in their commitment to combat addiction and promote holistic well-being. Through a comprehensive approach encompassing awareness campaigns, training initiatives, treatment services, and advocacy efforts, this collaborative venture aims to transform communities and create a safer, healthier environment for all.

**Key Areas of Activity Include:**

1. **Awareness on Alcohol and Drugs:** Extensive outreach efforts targeting villages, schools, and colleges to raise awareness about the dangers of addiction.
2. **Training:** Providing specialized training programs for volunteers and professionals to equip them with the skills needed to address addiction effectively.
3. **Treatment:** Offering inpatient and outpatient addiction treatment services, along with ongoing support and counselling for individuals and families.
4. **Follow-up and Continuation of Care:** Ensuring continuity of care for individuals' post-treatment through support groups and recovery programs.
5. **Mass Campaigns:** Organizing community events and awareness campaigns to mobilize support for addiction prevention and treatment.
6. **Advocacy:** Advocating for policy changes and interventions to curb substance abuse at the government level.
7. **Alliance with Government:** Collaborating with government agencies and officials to implement initiatives aimed at promoting a drug-free society.
8. **Mental Health Initiatives:** Organizing events and programs focused on raising awareness about mental health and its connection to addiction.
9. **Publications:** Publishing books, pamphlets, and other materials to educate the public about addiction and available resources for support and treatment.

Through these concerted efforts, Thiruppumunai, Holy Cross College, and the District Social Welfare Department strive to create a supportive environment that empowers individuals to overcome addiction and lead fulfilling lives.

## 2023-2024

## PERMISSION LETTERS

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கு.கோ.எண். 2943/அ1/2020 நாள்: 25.10.2023

பொருள் : சமூகநலம் - மாவட்ட சமூகநல அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் - நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் பள்ளி/கல்லூரி மாணவ மாணவியரை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு நடத்தை மாற்றுதல் பட்டய பயிற்சி (Behaviour Modification Course) நடத்த அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை : முனைவர்.J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன், மாவட்ட உறுப்பினர் நாசாமுக்த் பாரத் அபியான் திட்டம் அவர்களின் கடித நாள்:19.10.2023.

--------

கன்னியாகுமரி மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையுடன் இணைந்து நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் திருப்புமுனை போதைநோய் நலப்பணி அமைப்பு, ஹோலி கிராஸ் கல்லூரி இணைந்து பள்ளி/கல்லூரி மாணவ மாணவியரை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் நடத்தை மாற்றுதல் பட்டய பயிற்சிறை (Behaviour Modification Course) நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நடத்தை கோளாறுகளுக்கு ஆளாகாமல் மாணவர்களை முன்தடுக்கவும் மற்றும் நடத்தை கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை சீராக்கவும் நடத்தை மாறுதலில் முறையான பயிற்சியும் தேர்ச்சியும் கொண்ட நபர்களை கொண்டு 04.11.2023 அன்று முதல் துவங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பயிற்சியில் பள்ளி/கல்லூரிகளிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒன்றோ அல்லது இரண்டோ ஆசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அனுமதிக்காகவும்,
ஒப்புதலுக்காகவும்,

28/10/23
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

மாவட்ட சமூகநல அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

அனுப்புநர்

மாவட்டஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்,
@நாகர்கோவில்.

பெறுநர்

1. மண்டல இணை இயக்குநர்
உயர் கல்லூரிகல்வி இயக்குநரகம்,
திருநெல்வேலி மண்டலம்.

2. முதன்மை கல்வி அலுவலர்
கன்னியாகுமரிமாவட்டம்

ந.க.எண். 2943/அ1/2020 நாள்: 30.10.2023

பொருள் : சமூகநலம் - மாவட்ட சமூகநல அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் - நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் பள்ளி/கல்லூரி மாணவ மாணவியரை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு நடத்தை மாற்றுதல் பட்டய பயிற்சி (Behaviour Modification Diploma Course) விருப்பமுள்ள ஆசிரியர்கள் கலந்து கொள்ள சுற்றறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை : 1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதி நாள்.28.10.2023.
2. முனைவர்.J.பிரான்சிஸ் சேவியர் நெல்சன், மாவட்ட உறுப்பினர் நாசாமுக்த் பாரத் அபியான் திட்டம் அவர்களின் கடித நாள்:19.10.2023.

--------

கன்னியாகுமரி மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையுடன் இணைந்து நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் திருப்புமுனை போதைநோய் நலப்பணி அமைப்பு, ஹோலி கிராஸ் கல்லூரி இணைந்து பள்ளி/கல்லூரி மாணவ மாணவியரை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் **நடத்தை மாற்றுதல்** பயிற்சிநை (Behaviour Modification Course) நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நடத்தை கோளாறுகளுக்கு ஆளாகாமல் மாணவர்களை முன்தடுக்கவும் மற்றும் நடத்தை கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை சீராக்கவும் நடத்தை மாறுதலில் முறையான பயிற்சியும் தேர்ச்சியும் கொண்ட நபர்களை கொண்டு 04.11.2023 அன்று முதல் துவங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பயிற்சியில் பள்ளி/கல்லூரிகளிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒன்றோ அல்லது இரண்டோ ஆசிரியர்கள் கலந்து கொள்ள அனைத்து பள்ளி/கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/-P.ஸ்ரீதர்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

//உண்மைநகல்//உத்தரவுபடி//

மாவட்ட சமூகநல அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.
DISTRICT SOCIAL WELFARE OFFICER
KANYAKUMARI DISTRICT.
30/10/2

பெறுநர்: முனைவர்.J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்,
மாவட்ட உறுப்பினர் நாசாமுக்த் பாரத் அபியான் திட்டம்

கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4293/ஆ6/2023 நாள் .11.2023

பொருள்:- பயிற்சி – கன்னியாகுமரி மாவட்டம் – நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் பள்ளி / கல்லூரி மாணவ மாணவியரை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு நடத்தை மாற்றுதல் பட்டயப் பயிற்சி (Behaviour Modification Diploma Course) விருப்பமுள்ள ஆசிரியர்கள் கலந்து கொள்ள தகவல் தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை:- மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.2943/ அ1/ 2020 நாள் 30.10.2020

----------

பார்வையில் காணும் கடிதத்தில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையுடன் இணைந்து நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் திருப்புமுனை போதைநோய் நலப்பணி அமைப்பு, ஹோலி கிராஸ் கல்லூரி இணைந்து பள்ளி / கல்லூரி மாணவ மாணவியரை நடத்தை கோளாறுகளுக்கு ஆளாகாமல் மாணவர்களை முன்தடுக்கவும் மற்றும் நடத்தை கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை சீராக்கவும் நடத்தை மாறுதலில் முறையான பயிற்சியும் தேர்ச்சியும் கொண்ட நபர்களை கொண்டு ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் நடத்தை மாற்றுதல் பட்டயப் பயிற்சியை (Behaviour Modification Course) 04.11.2023 முதல் 20 வாரம் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பயிற்சியில் தங்கள் பள்ளியில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஆசிரியர்களை பயிற்சியில் கலந்துகொள்ள அறிவுறுத்துமாறும் 10.11.2023க்குள்(வெள்ளி) இணைப்பில் குறிப்பிட்டுள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிக்கு (இயக்குநர், திருப்புமுனை, 9486796009, 04652238425) தகவல் தெரிவிக்குமாறும் அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – கடித நகல்

3.11.23

முதன்மைக் கல்வி அலுவலர்

கன்னியாகுமரி மாவட்டம்

3.11.23

பெறுநர்

அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள்

கன்னியாகுமரி மாவட்டம்

**நகல்**

1. மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை) நாகர்கோவில், மார்த்தாண்டம்
2. மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள்) நாகர்கோவில் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
3. மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), கன்னியாகுமரி மாவட்டம்
4. மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.

# SUPERINTENDENT OF CATHOLIC SCHOOLS
## R.C. DIOCESE OF KOTTAR
Assisi Campus, Nagercoil - 629 001, Kanyakumari District, Tamil Nadu, India.
Ph.: 04652 - 295543, Email: benlavemaria@gmail.com, superintendentrcschool@gmail.com

**Fr. John Benitto**
Superintendent of Catholic Schools,
Kottar Diocese.
Cell : 81108 25013


Date : 03.11.2023

அன்புள்ள தாளாளர்களே, தலைமையாசிரியர்களே,ஆசிரியர்களே!

"போதைப்பொருள் இல்லாத இந்தியா" (**Nasha Mukt Bharat**) அரசுத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மிகவும் பயன்படுதின்ற வகையில்"நடத்தைமாற்றுதல்" பட்டயப் பயிற்சியை (Behaviour Modification Diploma Course) நமது கோட்டாறு மறைமாவட்ட ஆயர் நசரேன் அவர்கள் நமக்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். நமது கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியும் நமது மாவட்ட ஆட்சியர் அவர்களும் இப்பயிற்சியில் ஆசிரியர்கள் பங்கெடுக்க அனுமதியளிக்கிறார்கள்.

**'இன்று ஒருநாள் மட்டும்', "ஒரேஒருதடவை"** என்ற நினைப்பில், **'மதுதானே குடிக்கின்றேன்'** என்று ஆரம்பித்து போதைப் பொருட்களுக்கு அடிமையாகி (substance addiction) **'இணையதளத்தில் தானே விளையாடுகின்றேன்'** என்று எண்மின் ஊடகப்போதைக்கு ஆளாகி (digital media addiction) **ஈர்த்திழுக்கும் நடத்தையில் தானே ஈடுபடுகின்றேன்'** என்று நடத்தைக் கோளாறுகளில் (behavior dysfunction) மாணவர்கள் பலரும் சிக்கித் தவிக்கின்றனர்.

எந்த மாணவருமே நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளாகாமல் முன்தடுக்கவும், ஏற்கெனவே நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை மாற்றி சீரமைக்கவும், மனித நடத்தையை முறையாக உருவாக்கவும் உளவியல் பின்னணியோடு, அறிவியல் பார்வையுடன் அறிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது.

**நவம்பர் 4-ம் தேதி தொடங்கி 20 சனிக்கிழமைகள் போதை நோயியலில்** முறையான பயிற்சியும், **தேர்ச்சியும் பெற்றுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சியை** நிறைவு **செய்பவர்களுக்கு ஹோலிகிராஸ் கல்லூரியும், திருப்புமுனை போதைநோய்** நலப்பணியும், மாவட்ட **சமூகநலத்துறையும் இணைந்தளிக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.**

நடத்தை மாற்றுதல் சார்ந்த இப்பயிற்சியில் பள்ளியிலிருந்து ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒன்றோ அல்லது இரண்டோ ஆசிரியரைப் பங்கெடுக்கச் செய்ய உங்களின் அனுமதியைக் கோருகின்றேன். பங்கெடுக்க விரும்புபவர்கள் தங்கள் பெயரை நவம்பர் 1-ம் தேதிக்குள் (**J.**நெல்சன், இயக்குநர், **திருப்புமுனை** போதை நோய் நலப்பணி, நாகர்கோவில். அலைபேசி:9486796009, தொலைபேசி: 04652-238425) தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். பயிற்சிக்கான தகவல்கள் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கல்விப்பணியில்

Fr. John Benitto

அருட்பணி. ஜாண் பெனிட்டோ

SUPERINTENDENT
R.C SCHOOLS
DIOCESE OF KOTTAR
NAGERCOIL - 629 001

# CORPORATE MANAGEMENT OF ROMAN CATHOLIC SCHOOLS
## DIOCESE OF KUZHITHURAI

**Rev. Dr. S. Maria Rajendran**
M.A., M.Sc., M.B.A., M.S.W., M.Phil., Ph.D
Corporate Manager

CORPORATE MANAGEMENT OFFICE
BISHOP'S HOUSE CAMPUS
UNNAMALAIKADAI - 629 179
K.K. DIST., TAMIL NADU
04651 - 213 642
cmofficeedk@gmail.com

NO. EDN/K/CM/F C29/483 /2023 Date: 15.11.2023

பெறுநர்

தாளாளர்கள் / தலைமையாசிரியர்கள்
கூட்டாண்மை நிர்வாகம்,
குழித்துறை மறைமாவட்டம்.

அன்புடையீர்,

பொருள்: கல்வி - உதவி பெறும் சிறுபான்மைப் பள்ளிகள் - குழித்துறை மறைமாவட்டம் - கூட்டாண்மை நிர்வாகம் - "போதைப்பொருள் இல்லாத இந்தியா" (Nasha Mukt Bharat) நடத்தை மாற்றுதல் பட்டய பயிற்சி - சார்பாக.

"போதைப்பொருள் இல்லாத இந்தியா" (Nasha Mukt Bharat) அரசுத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படுகின்ற வகையில் "நடத்தை மாற்றுதல்" பட்ட பயிற்சியை (Behaviour Modification Diploma Course) திருப்புமுனை போதை நோய் நலப்பணி அமைப்பு மற்றும் ஹோலி கிராஸ் கல்லூரி இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. இப்பயிற்சிக்கு கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் அனுமதி அளித்துள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் பலரும் போதைப் பொருட்கள் மற்றும் ஊடக போதைக்கு ஆளாகி நடத்தை கோளாறுகளில் சிக்கித் தவிக்கின்றனர். எந்த மாணவருமே நடத்தை கோளாறுகளுக்கு ஆளாகாமல் முன்தடுக்கவும், ஏற்கனவே நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை மாற்றி சீரமைக்கவும், மனித நடத்தையை முறையாக உருவாக்கவும் உளவியல் பின்னணியோடு, அறிவியல் பார்வையுடன் அறிந்து கொள்ளது அத்தியாவசியமாகிறது.

நவம்பர் 18 -ம் தியதி தொடங்கி 20 சனிக்கிழமைகள் முறையான பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றுள்ள பயிற்சியாளர்களை கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு ஹோலி கிராஸ் கல்லூரி மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இணைந்து வழங்கும் பட்டய சான்றிதழும் திருப்புமுனை போதைநோய் நலப்பணி அமைப்பு மற்றும் மாவட்ட சமூகநலத்துறையும் இணைந்தளிக்கும் அரசு சான்றிதழ் என இரண்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

..2



கல்லூரிக் கல்வித் துறை

| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| முனைவர். இரா. பாஸ்கரன்,<br>எம்.எஸ்ஸி.,எம்.ஃபில்.,பி.எச்.டி<br>கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,<br>திருநெல்வேலி மண்டலம்<br>திருநெல்வேலி- 627 008. | முதல்வர்/செயலர்,<br>அரசு/அரசு உதவிபெறும்/சுயநிதி<br>கல்லூரிகள்,<br>திருநெல்வேலி மண்டலம். |

---

ஒ.மு.எண்: 12611/அ3/2023 நாள்: 30.10.2023

அய்யா/அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித்துறை – கல்லூரிக் கல்வி இணை இயக்ககம், திருநெல்வேலி மண்டலம் - 8 - அரசு உதவிபெறும்/ சுயநிதி கல்லூரிகள், நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ/மாணவியரை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு நடத்தை மாற்றுதல் பட்டய பயிற்சி (Behaviour Modification Diploma Course) விருப்பமுள்ள ஆசிரியர்கள் கலந்து கொள்ளுதல் - தொடர்பாக

பார்வை: நாகர்கோவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்: 2943/அ1/2020 நாள்: 30.10.2023

-------

பார்வையில் காணும் கன்னியாகுமரி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, கன்னியாகுமரி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையுடன் இணைந்து நாசா முக்த் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் திருப்புமுனை போதை நோய் நலப்பணி அமைப்பு, பயிற்சி (Behaviour Modification Diploma Course) நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார் .

நடத்தை கோளாறுகளுக்கு ஆளாகாமல் மாணவர்களை முன்தடுக்கவும் மற்றும் நடத்தை கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை சீராக்கவும் மாறுதலில் முறையான பயிற்சியும் தேர்ச்சியும் கொண்ட நபர்களை கொண்டு 04.11.2023 அன்று முதல் துவங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவ.ஃமாணவியர்கள் கலந்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கலந்து கொள்ள விருப்பமுள்ள ஆசிரியர்களுக்கு கட்டணமாக ரூ.2000/-, புகைப்படம், சான்றிதழ் நகல் மற்றும் மாணவ/மாணவியாக்ளுக்கு கட்டணமாக ரூ.1000/- அடையாள அட்டை (ID Card) கொண்டு வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு முனைவர். து. பிரான்சிஸ் சேவியர் நெல்சன், மாவட்ட உறுப்பினர் (948796009 மற்றும் 04652-238425) அவர்களை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இப்பொருள் மீது தனிகவனம் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

இரா. பாஸ்கரன் 30/10/23

**கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,**
**திருநெல்வேலி மண்டலம்-8**

F/c

**இணைப்பு:** மேற்காணுமாறு

**நகல்:**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கனியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

# CORPORATE MANAGEMENT OF ROMAN CATHOLIC SCHOOLS
## DIOCESE OF KUZHITHURAI

**Rev. Dr. S. Maria Rajendran**
M.A., M.Sc., M.B.A., M.S.W., M.Phil., Ph.D
Corporate Manager

CORPORATE MANAGEMENT OFFICE
BISHOP'S HOUSE CAMPUS
UNNAMALAIKADAI - 629 179
K.K. DIST., TAMIL NADU
04651 - 213 642
cmofficeedk@gmail.com



நடத்தை மாற்றுதல் சார்ந்த இப்பயிற்சியில் நமது கூட்டாண்மை நிர்வாகத்திற்குட்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளிலிருந்து குறைந்தது ஒரு ஆசிரியரும் உயர்நிலை பள்ளிகளிலிருந்து குறைந்தது இரண்டு ஆசிரியரும் மேல்நிலை பள்ளிகளிலிருந்து குறைந்தது மூன்று ஆசிரியர்களையும் கட்டாயமாக பங்கேற்க செய்ய கேட்டுக்கொள்கிறேன். அதிகமான நபர்களை பங்கேற்க ஊக்கப்படுத்துவது சிறப்புக்குரியதும் பாராட்டுக்குரியதும் ஆகும். பங்கேறபோரின் பெயர்களை 17.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் J. நெல்சன், இயக்குநர், திருப்புமுனை போதை நோய் நலப்பணி அமைப்பு அலைபேசி எண் : 9486796009, தொலைபேசி : 04652 - 238425 என்ற தொடர்பு எண்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்ய தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் பங்கேற்போரின் பெயரை கூட்டாண்மை நிர்வாகத்திற்கு தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இப்பட்டறை பயிற்சிக்கட்டணம் ரூபாய் 2,000/- இக்கட்டணத்தை அந்தந்த பள்ளிக்கூடங்கள் பொறுப்பேற்று செலுத்த வேண்டும்.

அருள்முளைவர் ச. மரிய இராஜேந்திரன்
**CORPORATE MANAGER**
**R.C. SCHOOLS**
**DIOCESE OF KUZHITHURAI**

## SYLLABUS FOR BEHAVIOUR MODIFICATION

| | | | |
|---|---|---|---|
| **I Behaviour dysfunction** | | | |
| **No** | **Date** | **Trainer** | **Topics** |
| 1. | Nov. 4 | Mathan Raj, Ph.D. | Human behaviour (healthy/Unhealthy) Introduction: explanation, Characteristics, Evolution and Dimensions |
| 2. | Nov. 11 | Edward, MA, LMT | Factors that determine behaviour: Nature/ Nurture |
| 3. | Nov. 18 | Nelson, Ph.D. | Comparative analysis of behaviour dysfunction and processes that cause similar effects like intoxicating substances |
| 4. | Nov. 25 | Lubeeth, MD | Behaviour dysfunction: Classification based on DSM V & ICD II |
| 5. | Dec. 2 | Stanislaus, M.Phil | Identifying the behaviour dysfunction developed in relation to the various stages (Infancy-Early childhood-Play age- School age-adolescence) of human development. |
| 6. | Dec. 9 | M. Ubald, ThD | Features and stages of behaviour modification |
| **II Behaviour modification** | | | |
| 7. | Dec. 16 | Selvi, SCC, PhD. | Pavlov and Watson's theory of Classical conditioning approach on behaviour modification: Stimulus- Response- Conditioned response |
| 8. | Jan. 6 | William, PhD | Thorndike & Skinner's theory of Instrumental conditioning approach.on behaviour modification- Conditioned learning through failure/reward |
| 9. | Jan. 13 | C. Stephen, Ph.D. | Bandura's theory of social learning approach on behaviour modification- Memory- Practice-Empowerment |
| 10. | Jan. 20 | Immanuel, M.Phil. | Boven and Minuchin's family system/structure on behaviour modification- Problems in families-changes initiated in at least one person- will create changes in the other persons- normal functioning of family |
| 11. | Jan.27 | S. Lawrence, Cap. PhD. | Elli's Rational Emotive approach on behaviour modification- Negative incidents - Positive thoughts/ feelings/behaviour |
| 12. | Feb. 3 | S. Wilson, Cap. PhD. | Behaviour modification through Bradshaw's approach of "Healing the inner child" |
| 13. | Feb. 24 | Leema Rose, SCC, PhD. | Behaviour modification through Yalom's Peer group dynamics- Edification-Trust -Change. |
| **III Behaviour Formation** | | | |

| | | | Stage of Develop-ment | Contradictions | To get | To feel | Way of expres -sion | Ques -tion raised | Challen -ge of parent | Paren -tal skill | If these Fail to occur |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14. | Mar.2 | S. Felix, MA, M.Sc. | 0 - 1. Infancy | Basic trust Vs Mistr ust | Affe ction | Prot ectio n | Calmn ess | Can I trust? | Being with them | Skill to main tain | Fear, anxiety, longing |
| 15. | Mar. 9 | Antin, SCC, PhD. | 3. Early childhoo d | Auton omy Vs Sham e | Rec ogni tion | Con cern | Move ment | Can I be mysel f? | Allowi ng | Skill to enab le mob ility | Deprecia tion, Inactive, depende ncy, |
| 16. | Mar. 16 | R. Mary John, PhD. | 4- 7 . Play age | Initiat ive Vs Guilt | Intro ducti on | Pow er | Trying | Can I do? | Enjoyin g | Skill to be patie nt | Hesitatio n, Avoidan ce, abandon ment |
| 17. | Mar. 23 | M.R. Basil, SCC, PhD. | 8- 12. School age | Indust ry Vs Inferi ority | Cha nce | App recia tion | Excite ment | Can I try? | Patting | Skill to unde rstan d | Doubtin, Humiliat ing, Compres sion |
| 18. | Apr. 13 | J. Gunapaul, M.Sc., MS. | 13- 19. Adolesce nce | Identit y Vs Confu sion | Free dom | Self-cont ribut ion | Respo nsible | Who am I? | Guidin g | Skill to deve lop the Uniq uene ss | Confusio n, Stumblin g, Slipping |
| 19. | Apr. 20 | Seenu, PhD., NIMHANS | Miller and Rollnick's approach of behaviour modification -Implementation of intention and motivational interviewing- Togetherness - Stimulus- awareness, skill development-wondeful functioning | | | | | | | | |
| 20. | Apr. 27 | S. Nazarene, DD, ThD. | Victor Frankl's method of Finding meaning- Challenges- searching meaning- finding - crossing- living a fulfilling life | | | | | | | | |

# BMDC CIRCULAR

போதைநோய் நலப்பணியும், மாவட்ட சமூகநலத்துறையும் இணைந்து நவம்பர் 4-ம் தேதியிலிருந்து தொடங்கி நடத்தவிருக்கின்றோம். இப்பயிற்சியை முறைப்படி நிறைவு செய்பவர்களுக்கு ஹோலி கிராஸ் கல்லூரியும், போதைநோய் நலப்பணியும், இணைந்தளிக்கும் பட்டயச் சான்றிதழ் வழங்கப்படும்.

நடத்தை மாற்றுதல் பயிற்சியில் ஆர்வமுடையவரும், இந்நடத்தை மாற்றுதல் பணியில் ஈடுபட்டிருப்பவரும், இப்பணியில் ஈடுபட விரும்புபவரும் திருப்புமுனை போதைநோய் நலப்பணியகத்தில் உங்கள் பெயரைப் பதிவுசெய்திட அன்புடன் வேண்டுகின்றேன்.

நமது மக்கள் எல்லாவிதமான நடத்தை கோளாறுகளிலிருந்து சீராக்கம் பெற்று சிறப்புடன் வாழ்ந்திட இப்பயிற்சி உதவ இறைவன் அருள்புரிவாராக!

கிறிஸ்துவின் மனநிலையில்

**ஆயர் நசரேன் சூசை**
(கோட்டாறு மறைமாவட்டம்)

**பயிற்சி சார்ந்த தகவல்**

| | |
|---|---|
| பயிற்சி தொடங்கும் நாள் | : நவம்பர் 4, 2023 |
| பயிற்சி நடைபெறும் நாள் | : சனிக்கிழமை தோறும் (20 வாரங்கள்) |
| பயிற்சி நடைபெறும் நேரம் | : காலை 9.30 - மதியம் 1.00 வரை |
| பயிற்சி நடைபெறும் இடம் | : பன்னோக்கு அரங்கம் ஹோலிகிராஸ் கல்லூரி, நாகர்கோவில் |

**தகவலுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**

அருட்பணி. **J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்** MAC, MSW, PhD
**இயக்குநர் திருப்புமுனை போதைநோய் நலப்பணி, ஆயர் இல்ல வளாகம்**
**மருத்துவக் கல்லூரி சாலை, நாகர்கோவில் - 629 001**
**தொலைபேசி எண் : 04652 238425 அலைபேசி எண்: 94867 96009**

**பின் குறிப்பு:**

1. இந்தச் சுற்றுமடல் நம் மறைமாவட்ட ஆலயங்களில் (அறிக்கையாக) 01.10.2023 நாள் ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் அறிவிப்பு நேரத்தில் வாசிக்கப்பட வேண்டும்.
2. இந்த சுற்றுமடலைப் பிரதிகள் எடுத்து உங்களுக்கு அறிமுகமான பிறருக்கும், குறிப்பாகப் பிறசபை மற்றும் சமயங்களை சார்ந்தவர்களுக்கும் வழங்க உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## நடத்தை மாற்றுதல் பட்டயப் பயிற்சி (Behaviour Modification Diploma Course)

### I. நடத்தைக் கோளாறுகள்

1. மனித நடத்தையின் வரலாற்றுப் பரிணாமங்களையும், பரிமாணங்களையும் அறிந்து கொள்ளுதல்: தொடக்கக்காலம் முதல் எண்மின் சமூக ஊடகக்காலம் வரையில்
2. நடத்தையை நிர்ணயிக்கும் இயல்பு (nature) மற்றும் வளர்ப்பு (nurture) காரணிகளைத் தெரிந்து கொள்ளுதல்.
3. நடத்தைப் போதையை மதுபோதை மற்றும் ஊடகப்போதை அடிப்படையில் உணர்ந்து கொள்ளுதல்.
4. நடத்தைக் கோளாறுகளை DSM V மற்றும் ICD 11 அளவீடுகளைக் கொண்டு புரிந்து கொள்ளுதல்
5. நடத்தைக் கோளாறுகளை வகைப்படுத்துதல்: மிதம் (mild) இடைநிலை (moderate) தீவிரம் (severe) – தன்மை – ஏற்படும்விதம் – பாதிக்கும்விதம் – கண்டறியும்விதம் – பொருத்தமான மருத்துவம் – ஆற்றுப்படுத்தும் முறை.

### II. நடத்தைச் சீராக்கம்

6. நடத்தை மாற்றுதலின் நிலைகள் அணுகுமுறை (stages of change): நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலை – தெளிவான நடத்தை நிலை
7. தொடர் நிபந்தனையாக்க நடத்தை மாற்றுதல் அணுகுமுறை: (classical conditioning – Pavlov & Watson) இயல்பான தூண்டுதல் – இயல்பான பதில்வினை – தொடர் நிபந்தனையாக்கம்.
8. உறுதிப்படுத்துதல் நிபந்தனையாக்க நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (instrumental conditioning – Thorndike & Skinner) முயன்று – தோற்று கற்றல்; பரிசு – தண்டனை உறுதிப்படுத்துதல்.
9. சமூக கற்றல் நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (social learning): சூழலைக் கவனித்தல் - நினைவில் நிறுத்துதல் - அதுபோலவே நடத்தல் - செயல்விளைவு மாறுதல்.
10. அறிவார்ந்த உணர்வு நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (cognitive emotive): ஓர் எதிர்மறை நிகழ்வு – நேர்நோக்கு சிந்தனை – நேர்நோக்கு உணர்வு – நேர்நோக்கு நடத்தை.
11. செயல்படுத்தும் எண்ணம் & ஊக்கமூட்டும் உரையாடல் நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (implementation of intention & motivational interviewing): இயைந்திருத்தல் – தூண்டுதல் - திறன்வளர்த்தல் - தானியங்குதல்
12. குடும்ப உறவின் கூட்டிணைப்பு & கட்டமைப்பு நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (family system & structure): குடும்பத்தில் பிரச்சனை – குடும்பத்தில் ஒருவரிடம் மாற்றம் ஏற்படுத்துதல் – மற்றவர்களிடமும் மாற்றம் ஏற்படுதல் – குடும்பம் சீராக இயங்குதல்
13. தோழமைக்குழு செயலியக்க நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (peer group dynamics): நம்பிக்கையின்மை – முன்மாதிரிகாட்டல் – தன்னம்பிக்கைபெறுதல் – மாற்றமடைதல்.
14. அவதிப்படும் அவதிப்படுத்தும் அகக்குழந்தையை நலப்படுத்துதல் வழியாக நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (healing the inner child).

### III. நடத்தை உருவாக்கம் (Behaviour Formation)

| | பருவம் | குழந்தைக்கு உருவாக வேண்டியது | குழந்தைக்கு கிடைக்க வேண்டியது | குழந்தை உணர வேண்டியது | குழந்தை வெளிப்படுத்தும் விதம் | குழந்தைக்குள் எழும் கேள்வி | பெற்றோருக்குச் சவாலாக இருப்பது | பெற்றோருக்குத் தேவையான திறன் | இவை நிறைவேறாவிட்டால் ஏற்படும் பிரச்சனைகள் | வளர்ச்சியின் பருவநிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | பாலப் பருவம் 0 – 1 | நம்பிக்கை | பாசப்பராமரிப்பு | பாதுகாப்பு | சிரித்தல் | நான் நம்பலாமா? | உடனிருத்தல் | பராமரிக்கும் திறன் | பயப்படுதல், பதற்றப்படுதல், ஏங்குதல் | நம்பிக்கை – அவநம்பிக்கை |
| 16. | மழலைப் பருவம் 2 – 3 | தன்னியக்கம் | அங்கீகாரம் | அக்கறை | இயங்குதல் | நானாக இருக்கலாமா? | அனுமதித்தல் | இயங்கவிடும் திறன் | சார்ந்திருத்தல், சுயமதிப்பிழத்தல் நின்றுவிடுதல் | தன்னியக்கம் – சந்தேகம்/அவமானம் |
| 17. | சிறுவப் பருவம் 4 – 7 | தன்முனைப்பு | பாராட்டு | வாய்ப்பு | முயற்சித்தல் | நான் செய்யலாமா? | இரசித்தல் | பொறுத்திருக்கும் திறன் | தயங்குதல், தவிர்த்தல், ஒதுங்குதல் | தன்முனைப்பு – குற்றவுணர்வு |
| 18. | மீளிப் பருவம் 8 – 12 | தன்னார்வம் | விளையாட்டு | ஊக்கம் | உற்சாக மாயிருத்தல் | நான் முயற்சிக் கலாமா? | தட்டிக் கொடுத்தல் | புரிந்துணர்ந்திடும் திறன் | தாழ்த்துதல், சந்தேகித்தல், அமுக்குதல் | தன்னார்வம் – தாழ்வுமனம் |
| 19. | வளரிளம் பருவம் 13 – 19 | தான்மையாக்கம் | சுதந்திரம் | தற்சார்பு | சிக்கெடுத்தல் | நான் யாரென அறிந்திருக் கிறேனா? | வழிகாட்டுதல் | தெளிவோடிருக்கும் திறன் | குழம்புதல், நழுவுதல், தடுமாறுதல் | தன்மையடையாளம் – தன்னிலைக்குழப்பம் |

20. வாழ்வில் அர்த்தம் காணும் நடத்தை மாற்றுதல் அணுகுமுறை (finding meaning in life): சவால்கள்–அர்த்தம் தேடுதல்–அர்த்தம் காணுதல்–நிறைவோடு வாழுதல்.

**கவனிக்க:** *ஒவ்வொரு நாள் தலைப்பின் இரு அமர்வுகளில், முதல் அமர்வானது பயிற்சி வகுப்பாகவும் (presentation) இரண்டாம் அமர்வானது செயல்முறை பயிற்சியாகவும் (demonstration) அமைந்திருக்கும்*

Most Rev. Nazarene Soosai Th.D., D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil – 629 001.
Kanyakumari District, Tamil Nadu, India.
Phone : Off : +914 – 4652-278343, 379152, 279933
: Per : +91 – 4652-278868
Fax : +91 – 4652 – 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

**No. C - 15/2022** **10.10.2022**

## நடத்தை மாற்றுதல் பட்டயப் பயிற்சி (Behaviour Modification Diploma Course)

இறை இயேசுவில் அன்புமிக்க அருட்பணியாளர்களே! துறவியர்களே! இறைமக்களே!

நலமாக வாழ அழைக்கும் இயேசுவின் அருளும் வழிகாட்டுதலும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

இன்றைய சமுதாயத்தைப் பார்க்கின்றபோது, நேரடியாகவோ மறைமுகமாகவோ வயது வரம்பின்றி எல்லா மக்களையும் பாதிக்கின்ற பிரச்சனைகளில் முதன்மையானதாகப் போதைக்கலாச்சாரம் இருக்கின்றது. **"துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், கலங்கி சிவந்த கண்கள், காரணம் தெரியாமல் கிடைத்த புண்கள், கலங்கிச் சிவந்த கண்கள்"** போன்ற ஏராளமான பாதிப்புகளுக்கு தாராளமாக குழந்தைகள், சிறார், இளையோர், இளைஞர், பெரியோர், முதியோர் என்ற வேறுபாடு இல்லாமல் பலரும் ஆளாகின்றனர். ஆனாலும் இக்கோளாறுகள் உருவாகுவதைப் பற்றி தெளிவாகத் தெரிந்து அறிந்து புரிந்து உணர்ந்து கொள்ளாத அவல நிலையைத்தான் காண்கின்றோம்.

'இன்று ஒரு நாள் மட்டும்', "ஒரே ஒரு தடவை" என்ற நினைப்பில், 'மதுதானே குடிக்கின்றேன்' என்று ஆரம்பித்து போதைப்பொருட்களுக்கு அடிமையாவதிலும் (substance addiction), 'இணையத்தளத்தில்தானே விளையாடுகின்றேன்' என்று ஊடகப்போதைக்கு ஆளாவதிலும் (media addiction), 'செய்யத்தூண்டும் நடத்தையில்தானே ஈடுபடுகிறேன்' என்று நடத்தைக் கோளாறுகளிலும் (behaviour dysfunction) பலரும் அங்கும் இங்கும் எங்கும் மாட்டித் தவிக்கின்றனர்.

மக்கள் நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளாகாமலிருக்கவும், ஏற்கெனவே நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை மாற்றி சீர்படுத்தவும் மனித நடத்தையை உளவியல் பின்னணியோடு, அறிவியல் பார்வையுடன் தெளிவாகப் புரிந்துகொள்வது அத்தியாவசியமாகின்றது.

**"நடத்தை மாற்றுதல்"** (behaviour modification) சார்ந்த 20 வகுப்புகளைக் கொண்ட 100 மணிநேர பட்டயப் பயிற்சியை ஹோலி கிராஸ் கல்லூரியும்,

## ACTIVITIES

Awareness programme on analysing drug addiction by labourers of industries. Collector Mr. Sridhar ordered the staff to investigate. The number for any complaints regarding drug addiction was displayed. This pogramme was organised on April 3rd 2023.

தினகரன் 03 APR 2023

தொழிற்சாலைகளில்

# பணியாளர்கள் போதைப்பொருள் பயன்படுத்துகிறார்களா?

நாகர்கோவில், ஏப்.3: தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் தடை செய்யப்பட்ட போதைபொருட்களை உட்கொள்கிறார்களா என்பதை கண்காணிக்க துறை அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

குமரி மாவட்ட சமூக நலத்துறை மற்றும் திருப்புமுனை அமைப்பு இணைந்து நடத்திய முதன்மை தன்னார்வலர்கள் பயிற்சி முகாம் நாகர்கோவிலில் நடைபெற்றது. முகாமில் குமரி மாவட்ட கலெக்டர் ஸ்ரீதர் கலந்து கொண்டு, முதன்மை தன்னார்வலர்கள் மற்றும் குடி பழக்கத்திலிருந்து மீண்டவர்களிடையே பேசியதாவது.

## துறை அலுவலர்கள் கண்காணிக்க கலெக்டர் உத்தரவு



நாகர்கோவிலில் நடந்த பயிற்சி முகாமில் பேசிய கலெக்டர் ஸ்ரீதர்.

## புகார் தெரிவிக்க '7010363173'

The Human development stage counselling certificate course was started in Holy Cross College (Autonomous, Nagercoil on November 4th 2023. Fr. Nelson, coordinator of Nasha Mukt Abhyan Scheme, gave an orientation on the course exhibiting the syllabus.

தினமலர்

தினமலர்
நாகர்கோவில் | புதன் | 1.11.2023

## நவ.,4ல் நடத்தை மாற்றுதல் 6 மாத பட்டய பயிற்சி துவக்கம்



**செம்பருத்திவிளை, நவ. 1—**

நாகர்கோவில் ஹோலி கிராஸ் பெண்கள் கல்லூரியில் நவ.,4ம் தேதி போதையில்லாத இந்தியா திட்டத்தின் கீழ் "நடத்தை மாற்றுதல் 6 மாத பட்டய பயிற்சி" துவங்குகிறது. இது குறித்து நாசா முக்த் பாரத் அபியான் திட்ட மாவட்ட உறுப்பினர் டாக்டர் பிரான்சிஸ் சேவியர் நெல்சன் கூறியதாவது: மத்திய அரசின் போதையில்லா இந்தியா திட்டமும், நாகர்கோவில் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி, திருப்புமுனை போதை நோய் நலப்பணி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சமூக நலத்துறை இணைந்து 100 மணி நேர "நடத்தை மாற்றுதல் பயிற்சி" வகுப்பு நடத்துகின்றன. நாகர்கோவில் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியில் 4ம் தேதி துவங்கி 6 மாதம் பயிற்சி அளிக்கப்படும். மேலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரை முறையாக வழிநடத்த இந்த பயிற்சி பயன்படும் என்பதால் ஆசிரியர்களும் கலந்து கொள்ள வேண்டும். இது குறித்து பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு மாவட்ட கலெக்டர் சுற்றிக்கை அனுப்பி உள்ளார். ஆர்வமுள்ளவர்கள் இந்த பயிற்சியில் கலந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார். செய்தி தொடர்பாளர் டாக்டர் அருள் குமரேஷ், பொறுப்பாளர்கள் ஆன்றனி பால், சேவியர் ஜூடு, ஆனி ஜெசீலா, ஆன்றனி ரவி, பிலோமினா, சந்திரா கலந்து கொண்டனர்.

A two day meeting was held on the topic Rehabilitation of Drug Addicts on 25th and 26th of September 2023. This programme was scheduled from 9 am to 5 pm. Experts gave orientation and talk on various topics.

**தமிழ்நாடு போதைநோய் பணிக்குழுக்களின் கூட்டமைப்பின் சந்திப்பு**

**25, 26 செப்டம்பர் 2023 (திங்கள் மற்றும் செவ்வாய்)**
**சங்கமம், கீழ்கல்குறிச்சி, தக்கலை**

**"போதைநோயாளிகளும் நலவாழ்வும்"**

**முதல் நாள் நிகழ்வுகள்: 25.09.2023 (திங்கள்)**

| | |
|---|---|
| காலை 09.00 – 10.00 வரை: | மனத்தெளிவு வேண்டல், மனஓட்டம், வரவேற்றல். |
| காலை 10.00 – 11.00 வரை: | முதல் அமர்வு: **"போதைநோயாளிகள் நலம்பெறுவதில் இருக்கும் சவால்களை அறிந்திடுதல்" பணி. S. மரிய மார்ட்டின்** |
| காலை 11.00 – 11.30 வரை: | தேநீர்இடைவேளை |
| காலை 11.30 – 01.00 வரை: | இரண்டாம் அமர்வு: **"போதைநோயாளிகளை மனிதநேயத்தோடு அணுகிடுதல்" பணி. J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்** |
| மதியம் 01.00 – 02.00 வரை: | உணவு இடைவேளை |
| மதியம் 02.00 – 03.30 வரை: | மூன்றாம் அமர்வு: **"போதைநோயாளிகளை மையப்படுத்தும் சிகிச்சை முறைகளை தெரிந்திடுதல்" திரு. J. சகாய பிராங்கோ** |
| மாலை 03.30 – 04.00 வரை: | தேநீர் இடைவேளை |
| மாலை 04.00 – 05.00 வரை: | நான்காம் அமர்வு: **"போதைநோயாளிகளுக்கு தன்னார்வப்பணி செய்திடுதல்" அருட்சகோதரி. M.R. பேசில் ரோஸ்** |

**இரண்டாம் நாள் நிகழ்வுகள்: 26.09.2023 (செவ்வாய்)**

| | |
|---|---|
| காலை 07.00 – 07.30 வரை: | திருப்பலி – **ஆயர் K. ஜார்ஜ் இராஜேந்திரன், தக்கலை மறைமாவட்டம்** |
| காலை 07.30 – 08.30 வரை: | உணவு இடைவேளை |
| காலை 09.00 – 10.30 வரை: | முதல் அமர்வு: **"போதைநோயாளிகளுக்குத் தேவையான மாற்று வழிமுறைகளையும், செயல்பாடுகளையும் புரிந்துணர்தல்" மனநல மருத்துவர் A. அருள்மேரி லூபீத், MD** |
| காலை 10.30 – 11.00 வரை: | தேநீர்இடைவேளை |
| காலை 11.00 – 12.00 வரை: | இரண்டாம் அமர்வு: **"போதைநோயாளிகள் நலம்பெற நாம் இப்போது என்னென்ன செய்கிறோம், இன்னும் என்னென்ன செய்யலாம்" என்று கலந்துரையாடுதல்** |
| மதியம் 12.00 – 01.00 வரை: | **திட்டமிடுதல், திறனாய்வு செய்தல், நன்றி கூறுதல், மனத்தெளிவு வேண்டல்.** |




Behaviour Modification Diploma Course was organised on December 16, 2023. Dr. S. Selvi, SCC was the resource person. It was held at Holy Cross College (Autonomous) Nagercoil.




Behaviour Modification Diploma Course was organised on February 24, 2024. Dr. P. Leema Rose, SCC was the resource person. It was held at Holy Cross College (Autonomous), Nagercoil.



Graduation ceremony was held in Holy Cross College (Autonomous), Nagercoil and newsletter was released. Feedback was collected from the participants



NEWSLETTER



# FEEDBACK

வணக்கம்!

மனித வளர்ச்சிப்பருவங்கள் ஆற்றுப்படுத்தல் -பட்டயப்பயிற்சி வகுப்பைப் பற்றிய தகவலை அருட்பணி. ஜாய் அவர்கள் முதன் முதலில் என்னிடம் சொன்னார். முதலில் வெறுமனே பொத்தம் பொதுவாகவே இவ்வகுப்பிற்கு வர நினைத்தேன். திட்டமிடாமலே வாழ்ந்த எனக்கு காலம் கொடுத்த உன்னத பரிசு இலக்கியமாக வாழ்வில் சேர்ந்த போது, பல்வேறு மக்களோடு பயணிக்கும் சூழல் அமைந்தது. அடிமட்ட வாழ்க்கை நிலையில் வாழ்ந்த எனக்கு, என்னைப் போலவே பல்வேறு மனிதர்களின் உள்ளரங்கமான சிக்கல்கள், வாழ்க்கைப்போராட்டங்களை கண்கூடாக கண்டு அணுஅணுவாக ரணப்பட்ட பல தருணங்கள் உண்டு.. இந்த தருணத்தில் அறிமுகமான பயிற்சி வகுப்பின் முதல் நாளில் எப்படி நடக்கிறது? என்கிற வேவுதல் மனநிலையோடு தான் வந்து சேர்ந்தேன்..ஆனால், முதல் நாள் வகுப்பே என்னை அப்படியே புரட்டிப்போட்டது..என்னுள் இருந்த பல பல அறியாமைகள் இடிந்து விழுந்து போனது. இப்பயிற்சி வகுப்புகள் சமூகத்திற்கு உதவினால் உதவட்டுமென்று கலந்து கொண்ட எனக்கு, இப்பயிற்சிகள் எனக்கே தேவையென்பதை புரிந்துக் கொண்டேன். என் பலம், என் பலவீனம், என் குணம், நான் ஏன் இப்படி இருக்கிறேன்? என்ற பல்வேறு குழப்பங்களுக்கு விளக்கம் கொடுத்தது பயிற்சி வகுப்புகள்.

ஒரு மனிதனின் வாழ்வை தீர்மானிக்கும் இடம் தாயின் கருவறை என்ற நிலையில் அக்கருவறையிலே தந்தை வழியாக எனக்கு கிடைத்த அதிர்ச்சிகளும், ஏமாற்றங்களுமே எனக்குள் பல பல பலவீனங்களை விளைவித்துக்கொண்டிருப்பதை உணர முடிந்தது. ஒவ்வொரு பருவத்திற்கான வகுப்போடு என் வாழ்வை ஒப்பீடு செய்யும் போது எந்த பருவத்திலுமே அந்தந்த பருவத்திற்குரிய அன்பு கிடைக்காமல் அப்பருவங்கள் மாபெரும் ஏக்கங்களாக, வெறும் வெற்றிடங்களாகவே போயிருப்பதை வேதனையோடு திரும்பி பார்த்தேன். சில வகுப்புகளின் போது மனம் கசியவே செய்தது..ஆயினும் இந்த அளவுக்கு உயிர்ப்போடு இச்சமூகத்தில் இலக்கியம் வழி உரச என் கற்றல் அனுபவங்கள் உதவியது என்பதையும் பயிற்சி வகுப்பில் கண்டுப்பிடித்தேன். மரபு நிலையிலே நிற்காமல் கற்றல் என்னை இன்னொரு பிறப்புக்கு எடுத்து சென்றதை உணர்ந்து என்னை நானே கை குலுக்கி கொள்ளுமளவுக்கு என் வாழ்வுக்கொரு கண்ணாடியாகவே பயிற்சி வகுப்புகளைப் பார்க்க முடிகிறது.

குருடன் குருடனுக்கு வழி காட்டமுடியாது -என்கிற இயேசுவின் கூற்றுப்படி, சமூகத்திற்கு தன் உடனிருப்பை வெளிப்படுத்துபவர்கள் முதலில் தங்களையே உறுதி செய்யவேண்டுமென்பதே முக்கியம். தன்னை உறுதி செய்யாமல் மற்றவர்களை சீர்படுத்த முடியாது என்பதற்கிணங்க நான் யார் என்பதை, என் மறைந்தப் பக்கங்களை கண்டுப்பிடித்து என்னை முழுமையாக நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்ள இப்பயிற்சிகள் எனக்கு உதவின. மனிதனுக்குரிய ஞானம் இயற்கையிலிருந்தே கிடைக்கிறது என்பதை கடைசி சில வகுப்புகள் வெளிப்படுத்திய போது, நான் வளர்ந்த மண்ணில் விளையாடிய விளையாட்டுகள், கதை பேசி வளர்ந்த மரங்கள், காட்டுப்பூக்களோடு பாடிய பாட்டுகளென நினைவில் வந்து சிலிர்ப்பூட்டின. பிரபஞ்ச மடியில் முழுமையாக வாழ்ந்ததன் விளைவாக கிடைத்த ஞானமே இலக்கியமாக கைக்கு எட்டியது என்பதையும் இப்பயிற்சி வகுப்புகள் உணர்த்தின. சமூகத்திற்கென வந்த வகுப்புகள் என்னை புடமிட்ட போது புதிதாக என்னை உணர்ந்தேன். என்னில் மாற்ற முடியாததை முதலில் ஏற்றுக்கொள்ள துணிந்தேன்.

இருபது வகுப்புகளையும் மிகவும் சிறப்பாக திட்டமிட்டு நடத்திய பயிற்சியாளர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒளித்துளி இன்னொரு ஒளியை ஏற்றுவிக்க ஒருநாளுமே தன் முனையை மறைத்துக்கொள்வதில்லை.அது போலவே இப்பயிற்சி வகுப்புகளைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்து நடத்திய அருட்பணி. நெல்சன் அவர்கள் எனக்கொரு முக்கிய நேர்முக பாடமாகி போனார். அவரின் ஒவ்வொரு அசைவுகளிலும் மிக மிக நுட்பமான பாடங்களைக் கற்றேன்.

வகுப்பு துவக்கத்தில் ஒளிப்பரப்பும் இறைவணக்கப்பாடல் எந்தவித குழப்பமான மனநிலையையும் மாற்றி வகுப்பறைக்குள் சுகமாக அழைத்துச்செல்ல வழி வகுத்தது. குழுக்கள் அமைத்து அதன் வழியாக கிடைத்த அனுபவங்கள் மிகவும் உத்வேகத்தைக் கொடுத்தது. புதிய நட்புகள்,புதிய அனுபவங்கள் பெற இப்பயிற்சிப் பட்டறை உதவியது. ஆண் -பெண் பாகுபாடின்றி

சக நேர்த்தியுடன் ஒருவரையொருவர் அன்பு செலுத்தி நட்பு பாராட்ட முடிந்தது. காலை வேளையில் காலத்தாமதாக கல்லூரி வளாகத்தில் வருகையில் ஆண் பெண் பேதமின்றி தங்கள் வாகனங்களில் ஏற்றி உதவி செய்த விதம் நெகிழ்ச்சியைக் கொடுத்தது. தேநீர் வழங்கும் இடத்திலும் சரி, குழுக்களாக பிரியும் நேரத்திலும் சரி ஒரு சின்ன சலசலப்புக் கூட இல்லாமல் மிக நேர்த்தியாக வகுப்பு மாணவர்களை வழி நடத்திய ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்களே.

பயிற்சி வகுப்பில் இணைந்து கற்ற அனைத்து நபர்களையும் அவர்கள் எந்த துறை வல்லுநர்களாக இருந்தாலும் எந்த வித முன்னுரிமையும் இல்லாமல் அனைவரும் சக மாணவர்கள் என்ற நிலையில் சமத்துவமாக கற்ற கல்வி விதம் மிகவும் கவர்ந்தது. வகுப்பு துவங்கும் போது கொடுக்கும் மன ஓட்டம் முதல், பயிற்சி அனுபவம் குறித்து பேசும் வரையிலும் முழுதாக என்னைத் தேடும் படியாகவே இருக்கும்..நான் யார்? என்கிற சுய தேடலுக்கு என்னை அழைத்துச்சென்று என் பலவீனங்களையும் அணைத்துக்கொள்ளும் படியாக அமைந்த இப்பயிற்சி வகுப்புகள் என் வாழ்க்கை ஏட்டில் அதற்கான தகுதியோடு பொருந்திப் போய் சமூகத்திற்கும் பல மாற்றங்களை விளைவிக்கும் என்ற நன்றியுடன் இப்பதிவை சமர்ப்பிக்கிறேன்!

என்றென்றும் அன்புடன்
மாணவி. புளோறா (மலர்வதி)

## 2022-2023

## PERMISSION LETTERS



# THIRUPPUMUNAI
# ADDICTION TREATMENT MINISTRY

**FOR AWARENESS, TRAINING AND INTERVENTION**
Bishop's House Campus, Nagercoil-629001, Kanyakumari District
Email: nlp2004fra@yahoo.com
Mobile: 9486796009
Francis Xavier Nelson, MA, MAC, MSW, PhD, *Director*

---

Date: 10/17/2022

பெறுநர்

**முனைவர் அ. புகழேந்தி** MSc, MEd, MPhil, PhD
முதன்மைக் கல்வி அதிகாரி
கன்னியாகுமரி மாவட்டம்

**அன்புள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களுக்கு,**

"**போதை இல்லாத இந்தியா** திட்டத்தின்" **(Nasha Mukt Bharat Abhiyaan)** அடிப்படையில் மாணவர்களை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படுகின்ற வகையில் "**ஊடகப்போதை - போதைநோய் - போதைநோய் நலமுறை**" பட்டயப் பயிற்சியை ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

இன்றைய மாணவ சமுதாயத்தை நேரடியாக பாதிக்கின்ற அம்சங்களில் முதன்மையாக இருப்பது போதைக்கலாச்சாரம் என்று எளிதாகச் சொல்லிவிடலாம். மாணவர்கள் "**ஒரு ஒரு தடவை**", "**இன்று ஒருநாள் மட்டும்**" சவால்களை ஏற்றுக்கொண்டபடி, எப்படியிருக்குமென சோதித்துப்பார்க்க, ரசிக்க என்று போதைக்குள் நுழைவது, போதைக்குள்ளேயே சிக்கிக் கொள்ளும் நிலைமைக்கு ஆளாக்கிவிடுகிறது. எனவே, எந்தவித போதைக்குள்ளும் நுழையாமல் தடுக்கவும், போதைக்கு ஆளானவர்கள் நிறுத்தவும், நிறுத்த இயலாமல் தவிப்பவர்கள் சிகிச்சை எடுக்கவும், போதையை அறிவியல் பார்வையுடன், உளவியல் பின்னணியோடு புரிந்து கொள்வது அத்தியாவசியமாகிறது.

**போதையிலிருந்து அதிலும், ஊடகப்போதையிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் விதத்தில் நவம்பர் 12ஆம் தேதி தொடங்கி 20 சனிக்கிழமைகள் போதைநோயியலில் முறையான பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு திருச்சிலுவை கல்லூரி மற்றும் போதைநோய் நலப்பணியின் இணைந்த பட்டயமும் கொடுக்கப்படும்.**

இப்பயிற்சியில் பள்ளியிலிருந்து ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒன்றோ அல்லது இரண்டோ ஆசிரியரைப் பங்கெடுக்கச் செய்ய உங்களின் அனுமதியைக் கோருகின்றேன். பங்கெடுக்க விரும்புபவர்கள் தங்கள் பெயரை நவம்பர் 9ஆம் தேதிக்குள் (J. **நெல்சன், இயக்குநர், திருப்புமுனை போதைநோய் நலப்பணி, நாகர்கோவில். அலைபேசி: 9486796009, தொலைபேசி: 04652-238425)** தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். **பயிற்சிக்கான தகவல்கள் இக்கடிதத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.**

உங்கள் அன்புள்ள

**(முனைவர் J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்)**



**THIRUPPUMUNAI**
**ADDICTION TREATMENT MINISTRY**
FOR AWARENESS, TRAINNING AND INTERVENTION
Bishop's House campus, Nagercoil – 629001, Kanyakumari District
Mobile : 9486796009
Francies Xavier Nelson, MA, MAC, MSW,PHD, *Director*

பெறுநர் தேதி : 07.11.2022

**பொருள் : செய்தியாளர் சந்திப்பு நிகழ்வு (08.11.2022) அழைப்பு**

**இந்திய அரசின் "போதை இல்லாத இந்தியா" திட்டத்தின் கீழ் "ஊடகப்போதை (Media Intoxication)" அதிலிருந்து மீளும் நலமுறைகள் - பட்டயப் பயிற்சி தொடக்க நிகழ்வு - குறித்து**

இன்றைய காலகட்டத்தில் சிறியவர் முதல் பெரியவர் வரை செல்போன் பயன்பாடு, இணைய பயன்பாடு என பல்வேறு ஊடகங்களை பயன்படுத்தி வருகிறார்கள். அளவுக்கு அதிகமாக பயன்பாடு தொடரும் போது அதை பயன்படுத்துபவர்கள் "ஊடகப்போதை" எனும் படுகுழியில் விழுந்து தனது வாழ்க்கையை இழக்கும் சூழலுக்கு தள்ளப்படுகிறார்கள்.

இந்த சூழலில் இந்திய அரசின் "போதையில்லாத" இந்தியா திட்டத்தின் அடிப்படையில் திருப்புமுனை போதை நோய் நலப்பணியும், திருச்சிலுவை கல்லூரியும், கன்னியாகுமரி மாவட்ட சமூக நலத்துறையும் இணைந்து நடத்தும் 100 மணிநேர "ஊடகப்போதை"- அதிலிருந்து மீளும் நலமுறைகள் (Media Intoxication) பட்டயப்பயிற்சி (நவம்பர் 12,2022 – மே 27, 2022) தொடங்குகிறது.

**செய்தியாளர்கள் சந்திப்பு**

இது குறித்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்வை வருகிற **08.11.2022 செவ்வாய்கிழமை காலை 10.30** மணியளவில் நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் ரோட்டில் உள்ள பிஷப்ஹெளஸ் அலுவலக வளாகத்தில் செயல்படும் திருப்புமுனை போதைநோய் நல அலுவலகத்தில் வைத்து பிறஸ்மீட் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் தங்கள் பத்திரிகை, தொலைகாட்சி, நிருபர்கள், வீடியோகிராபர்கள், போட்டோகிராபர்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

நன்றி

இடம் : நாகர்கோவில் இப்படிக்கு

Francis X Nelson
முனைவர் பிரான்சிஸ் சேவியர் நெல்சன்

## Intoxicants-Addictions-Interventions Diploma Course was developed by Dr. Fr. Francis Xavier Nelson as a pilot project of Intoxicants Free India Campaign - Nasha Mukt Bharat Abhiyaan - "Nghijg;nghUs; ,y;yhj ,e;jpah jpl;lk;;."

| Duration: November 6> 2021 to June 4> 2022 | Venue: Multipurpose Hall, Holy Cross College | Time: 9.30 am to 1.00 pm |
|---|---|---|

| S. No | Date | Presenter | Presenter Details | Topic |
|---|---|---|---|---|
| 1 | Nov 6 | J. Francis Xavier Nelson MAC, MSW, PhD | Director, Thiruppumunai Addiction Treatment Ministry, Nagercoil | Intoxicants & Humanity: A General Introduction |
| | | S. Annie Perpet Sophy MA, PhD | Principal, Holy Cross Autonomous College, Nagercoil | |
| 2 | Nov 13 | A. Francis Jayapathy SJ, MSc MPhil | Director, Jesuit Ministry to Alcohol and Drug Dependents, St. Joseph College, Trichy | Intoxicants: Cultural Myths & Misconceptions |
| 3 | Nov 20 | S. Alwin Mathan Raj MSc, PhD | Correspondent, Agniswamy College of Education, Muttom, KK District; | Intoxicants: Historical perspective |
| 4 | Nov. 27 | E. Sinu MSW, PhD | Professor, Psychiatric Social Work Department, NIMHANS, Bengaluru | Intoxicants: Types & Categories |

Name – Type – Quintessence – Metabolism – Physical, Mental, Family, Societal, Economic, Spiritual Damages – Challenges Needing Special Attention – BioPsychoSocial Perspective – Treatment Methods

| S. No | Date | Presenter | Presenter Details | Topic |
|---|---|---|---|---|
| 5 | Dec 5 | A.J. Rex MA (Psy.), CPE | Director, Multipurpose Social Service Society, Valliyoor | Alcohol: Beer. Wine & Spirits |
| 6 | Dec 11 | Y. Arul Prakash; MD, DPM | Professor of Psychiatry & Medical Superintendent, Government Medical College, Nagercoil, Kanyakumari District | Cannabis: Kanja & Marijuana |
| 7 | Dec 18 | V. Bijvin Raj MDS. PhD | KMMC Hospitals, Muttom, Kanyakumari District | Tobacco: Chewing & Smoking |
| 8 | Jan 8 | J. Anbin Amalan OFM Cap, UTC | Director, Anbagam Addiction Treatment Centre, Okkur, Sivagangai | Inhalents: Sniffing & Snorting |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | Jan 22 | D.A. Masilamony SJ. MA, PhD | Director, Jesuit Ministry to Alcohol & Drug Dependents, Kuppainallur | Caffeine: Coffee and Tea & Syrups |
| 10 | Jan 29 | D. John Dharman; SDB, MSW, PhD | Director, Don Bosco Addiction Counseling Centre, Trichy | Opium & Cocaine |
| 11 | Feb 5 | R.S. Justin Paul; MBBS, DPM | Assistant Professor of Psychiatry, Department of Psychiatry, Government Medical College, Kanyakumari District | Pills & Injections |
| 12 | Feb; 12 | S. Maria Martin PGDCP | Addiction Counselor, Puthuvasanth Addiction Treatment Ministry, Vettuvenni | Other Substances: Natural & Synthetic |
| 13 | Feb. 19 | A. Arulmary Lubeeth; MD (Psychiatry) | Assistant Professor of Psychiatry, Department of Psychiatry, Government Medical College, Kanyakumari District | Substance Use Disorders (SUD) and Co-existing Disorders |
| 14 | Feb. 26 | K. Arun MD (Psychiatry) | Additional Professor of Psychiatry, Department of Psychiatry, NIMHANS. Bengaluru | Interventions for the Substance Abusers and Drug Dependents |
| 15 | Mar 26 | J. Felicia SCC, MA, PhD | Student & Family Counselor, Holy Cross College, Nagercoil | Psychotherapies for the Drug Addicted & Family Affected |
| 16 | Apr 2 | I. Antony John Kennedy MTh | Director, Halcyon Addiction Treatment Centre, Madurai | 12Step Self-Support Groups for Recovery |
| 17 | Apr 9 | S. Vengatachalam PhD (BFR), MD (AM), MD (Acu) | National President, Indian Natural Therapy Council, Sattur | Alternative Treatment Methods for Substance Addiction |
| 18 | Apr 19 | R. Dhanasekara Pandian MSW, PhD | Head of the Department, Psychiatric Social Work, NIMHANS, Bengaluru | Involvement of Family & Community in Maintaining Sobriety from Intoxicants |
| 19 | Apr 23 | S. Nazarene DD, ThD | Bishop of Kottar Diocese, Nagercoil, Kanyakumari District | Role of Spirituality & Function of Laws in Connection with Drug Menace |
| | | M.C. Rajan ML, PhD | Human Rights Lawyer, High Court, Chennai | |
| 20 | Apr 30 | S. Sheeba Williams MSW | Addiction Trainer, TTK Addiction Research Hospital, Chennai | Guidelines for the Society to be Free from all Intoxicating Addictive Substances |
| | | R. Sarojini BSc | Social Welfare Officer, Department of Social Welfare, KK District | |

Media Intoxication – Addiction – Intervention – Diploma course was organised by Nasha Mukt Abhiyan Scheme from November 12, 2022 to May 27, 2023 in Holy cross College (Autonomous), Nagercoil on Saturdays.

**இந்திய அரசின் "போதை இல்லாத இந்தியா" திட்டத்தின்**
**(Nasha Mukt Bharat Abhiyaan) அடிப்படையில்**
**திருப்புமுனை போதைநோய் நலப்பணியும், திருச்சிலுவை கல்லூரியும்,**
**கன்னியாகுமரி மாவட்ட சமூக நலத்துறையும் இணைந்து நடத்தும் 100 மணிநேர**
**"ஊடகப்போதை - போதைநோய் - போதைநோய் நலமுறை பட்டயப் பயிற்சி"**
**(Media Intoxication – Addiction – Intervention – Diploma Course)**
**(நவம்பர் 12, 2022 – மே 27, 2023)**

இன்றைய சமுதாயத்தை பார்க்கின்றபோது, வயது வரம்பின்றி எல்லா மக்களையும் பாதிக்கின்ற பிரச்சனைகளில் முதன்மையானதாகப் போதைக் கலாச்சாரம் இருக்கின்றது. **"துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், கலங்கி சிவந்த கண்கள், காரணம் தெரியாமல் கிடைத்த புண்கள்"** போன்ற ஏராளமான பாதிப்புகளைப் போதை தாராளமாக குழந்தைகள், சிறார்கள், இளையோர், இளைஞர், பெரியோர், மூத்தோர் என்ற வேறுபாடு காட்டாமல் போதைத் தாராளமாக விளைவிக்கின்றது. ஆனாலும் பலரும் போதையினால் விளையும் பாதிப்புகளைப்பற்றித் தெளிவாக அறிந்து உணர்ந்து கொள்ளாத அவல நிலையைத்தான் காண்கின்றோம்.

எதார்த்தம் என்னவென்றால், யாருமே விரும்பி வேண்டுமென்றே போதைநோயாளியாகுவதில்லை. **'ஒரே ஒரு தடவை', 'இன்று ஒரு நாள் மட்டும்'** என்று போதைக்குள் நுழைவது, போதைக்குள்ளேயே சிக்கிக் கொண்டு அவதிப்படும், அவதிப்படுத்தும் நிலைமைக்கு ஆளாக்கி விடுகின்றது. **'மதுதானே குடிக்கிறேன்'** என்று பொருட்போதையிலும் (substance intoxication), **'இணையதளத்தில்தானே இருக்கிறேன்'** என்று ஊடகப்போதையிலும் (media intoxication) **'பிடித்தவரோடுதானே பழகுகிறேன்'** என்று நடத்தைப்போதையிலும் (behavior intoxication) பலரும் அங்கும் இங்கும் எங்கும் மாட்டித் தவிக்கின்றனர்.

இந்நிலை மாறிட, எந்தவிதமான போதைக்குள்ளும் யாருமே புதிதாக நுழையாமலிருக்கவும், ஏற்கெனவே ஆளானவர்கள் நிறுத்தவும், நிறுத்த இயலாதவர்கள் சிகிச்சை எடுக்கவும், சிகிச்சைக்குப்பின்பு பராமரிப்பைத் தொடரவும் வேண்டியிருக்கின்றது. இதற்குப் போதையை உளவியல் பின்னணியோடு, அறிவியல் பார்வையுடன் தெளிவாகப் புரிந்துகொள்வது அத்தியாவசியமாகின்றது.

இதில், முதல் கட்டமாகப் பொருட்போதை (substance intoxication) சார்ந்த 20 வகுப்புகளைக் கொண்ட 100 மணிநேரப் பட்டயப் பயிற்சியை நடத்தி முடித்திருக்கின்றோம். அடுத்து, இரண்டாம் கட்டமாக ஊடகப்போதை (media intoxication) சார்ந்த 20 வகுப்புகளைக் கொண்ட 100 மணிநேர பட்டயப் பயிற்சியை போதைநோயியலில் முறையான பயிற்சியும், தேவையான தேர்ச்சியும், பெற்றுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு போதைநோய் நலப்பணியும், திருச்சிலுவைக் கல்லூரியும் இணைந்து நவம்பர் 12-ம் தேதி சனிக்கிழமையிலிருந்து திருச்சிலுவைக் கல்லூரியின் பன்னோக்கு அரங்கில் வைத்து நடத்தவிருக்கின்றோம். இப்பயிற்சியை முறைப்படி நிறைவு செய்பவர்களுக்குப் போதைநோய் நலப்பணியும், திருச்சிலுவைக் கல்லூரியும் இணைந்தளிக்கும் பட்டயச் சான்றிதழ் வழங்கப்படும்.

ஊடகப்போதை சார்ந்த இப்பயிற்சியில் ஆர்வமுடையோரும், இப்பணியில் ஈடுபட்டிருப்போரும், போதைசார் பணிகளில் ஈடுபட விரும்புவோரும் திருப்புமுனை போதைநோய் நலப்பணியகத்தில் உங்கள் பெயர்களை பதிவு செய்திட அன்புடன் வேண்டுகின்றேன்.

| | | |
|---|---|---|
| **பயிற்சி தொடங்கும் நாள்** | : | **நவம்பர் 12, 2022** |
| **பயிற்சி நடைபெறும் நாள்** | : | **சனிக்கிழமை தோறும் (20 வாரங்கள்)** |
| **பயிற்சி நடைபெறும் நாள்** | : | **காலை 9.30 – மதியம் 1.00 மணி வரை** |
| **பயிற்சி நடைபெறும் இடம்** | : | **பன்னோக்கு அரங்கம், திருச்சிலுவை கல்லூரி, நாகர்கோவில்** |

**கவனிக்க: ஒவ்வொரு நாளின் தலைப்புக்கான இரு அமர்வுகளில் முதல் அமர்வு 9.30 – 11.00 வரை பயிற்சி வகுப்பாகவும் (presentation), இரண்டாம் அமர்வு (11.30-12.30 வரை) பெல்முறைபயிற்சியாகவும் (practicum) அமைந்திருக்கும்.**

**தகவலுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**

**முனைவர் J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன் MAC, MSW, PhD**
**இயக்குநர்**
**திருப்புமுனை போதைநோய் நலப்பணி, ஆயர் இல்ல வளாகம்,**
**மருத்துவக் கல்லூரி சாலை, நாகர்கோவில் - 629 001**
**அலைபேசி எண்: 94867 96009**
**தொலைபேசி எண்: 04652-238425**

An awareness rally on Drugs was organised by Nasha Mukt Abhiyan Scheme on 30th August 2022 a Govt High School, Thiruvithancode. Assistant Commissioner Mr. Ganesh was the Resource Person.



Nasa Mukt Bharat Abhiyan Intoxicants Free India Campaign was organised on 29th November with 160 participants

VIRTUAL TIMES

NATIONAL EVENING ENGLISH DAILY PRACTICAL EXPOSE

# X"NASHA MUKT BHARAT ABHIYAAN"

## Intoxicants Free India Campaign



Kanyakumari, Nov 29: A Joint Venture of Holy Cross Autonomous College, Thiruppumunai Addiction Treatment Ministry and Kanyakumari District Social Welfare Department.

The First Day, 29th November, 160 persons attended the Diploma Program. Dr. Nelson, Director of Thiruppumunai cum Course organizer, welcomed everyone. Dr. Sr. Sahaya Selvi, Principal, Holy Cross College, excellently handled the first session on "The Influence of Social Media." The second session on "The Challenges faced by the Influence of Social Media" was dealt with by Dr. Fr. Nelson.

The 2nd class, in our Media Addiction Course with 180 participants, on 19th November, was presented by Dr. Fr. Stephen Martin SJ who excellently dealt with "The Evolution and Dimensions of Digital Media". His class was spectacular and his class notes and PPT were also superb.

The 3d class with 190 participants, on 26th November, was handled by Dr. Sr. Leema Rose, Vice principal of Holy Cross College, on "Uses and Specialities of tele-cellular-mobile-smart-handphone."

She did an excellent and spectacular presentation and all the participants were inspired. Her class gave us the positives and benefits of Digital Cellphone.

It was surprising and astonishing to see participants from Chennai, Coimbatore, Vathalaguntu, Trichy, Dindigul, Sivagangai, Madurai, Tuticorin, Tirnelveli, Trivandrum and all over Kanyakumari District.

The class which started at 9:30 am ended exactly at 1:00 pm. At close, many came forward to give feedback about the usefulness of the session today.

Our upcoming 4th class is the most important class on "Digital Gadgets-Brain-Media Addiction" on 10th December by Dr.Alph Shirley MD, Assistant Professor & Pediatrician from KK Govt Medical College. This class is a must for all.

Sources: Nelson, Director, Thiruppumunai Addiction Treatment Ministry, Nagercoil

Media Intoxication – Addiction – Intervention – Diploma course was organised on November 26, 2022. Dr. P. Leema Rose, SCC was the resource person. It was held at Holy Cross College (Autonomous) Nagercoil.



Graduation ceremony was held in Holy Cross College (Autonomous), Nagercoil in July 2023. The most Rev. Bishop Nazren Soosai presided over the function.



# ஹோலிகிராஸ் கல்லூரியில் சான்றிதழ் வழங்கும் விழா

செம்பருத்திவிளை, ஜூலை10–

மத்திய அரசு திட்டமான "போதை பொருள் இல்லாத இந்தியா" திட்டத்தின் கீழ் மாவட்ட சமூக நலத்துறை, ஹோலி கிராஸ் கல்லூரி, திருப்புமுனை போதை நோய் நலப் பணி இணைந்து 100 மணி நேரம் நடந்த போதையூட்டும் பொருட்கள், போதை நோய்கள், போதை நோய் நல முறைகள் பற்றிய தலைப்பில் நடந்த பட்டய பயிற்சியின் சான்றிதழ் வழங்கும் விழா நாகர்கோவில் ஹோலிகிராஸ் கல்லூரியில் நடந்தது.

துணை முதல்வர் லீமாரோஸ் வரவேற்றார். சுகுமாரி பயிற்சியின் அனுபவ உரையாற்றினார். 100 மணி நேர பயிற்சி சுருக்கத்தை எல்சி ரெபேக்கா, பிதலீஸ் எடுத்துரைத்தனர். பயிற்சியில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு மாவட்ட சமூக நல அதிகாரி சரோஜினி பரிசு வழங்கி கவுரவித்தார். டாக்டர் சேவியர் சற்குணம், டாக்டர் பிரான்சிஸ் நெல்சன் பேசினர். கோட்டாறு மறை மாவட்ட பிஷப் நசரேன் சூசை பயிற்சி பெற்ற 250 பேருக்கும் மெடல் அணிவித்ததுடன் சான்று வழங்கி தலைமை உரையாற்றினார். அருட்சகோதரி ஆனி பெர்பெட் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் ஏளம்கே தொண்டு நிறுவன இயக்குனர் அருள் ஜோதி, நியூ பாரத் டிரஸ்ட் இயக்குனர் அருண்குமார், திருப்புமுனை போதை நோய் நலப்பணி மைய செய்தி தொடர்பாளர் டாக்டர் அருள் குமரேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நான்கு வழிச்சாலையில் வேகமாகச் செல்லும் வாகனங்களுக்கு வலதுபுறத்தில் வழிவிடவும்



## 2021-2022

## PERMISSION LETTERS

From

District Collector,
Kanyakumari District,
@ Nagercoil -629001

To

1.District Superintendent of Police,
Kanyakumari District.
2. Hon.K.Nambirajan,
Secretary / Sub Judge,
District Legal services Authority,
Kanyakumari District.
3.District Educational Officer,
Kanyakumari
4. District Medical Supdt,Kanyakumari
5.Child Development Project Officer,
Rajakkamangalam.
6.District Child Protection Officer,Kanyakumari
7. CATS,NGO
8.New BHARAT Trust,NGO
9.Athencottasan Muthamizh Kazhagam,NGO
10. Dr.M.Radhakrishan(Retd Deen)
11.Thiru.Arumugam (Retd Supdt)

Roc.No.3027/A1/2020 Date 07.09.2020

Respected Sir,

Sub: Committeee meeting on NASHA MUKT BHARAT - meeting on 11.09.2020 -Intimation - reg

Ref: 1.Joint Secretary,Government of India, Ministry of Social Justice and Empowerment,New Delhi, D.O.No.12-1/2020-DP-II dated 13.07.2020
2.The District collectror approval date 04.09.2020

-----------

The District Collector has proposed to conduct meeting on **11.09.2020 at 4.30 P.M** regarding on NASHA MUKT BHARAT (To Reduce the Drug Addiction) committee meeting. Hence, it is requested to attend the meeting without fail.

sign/-District Collector,
kanyakumari District.

By order

District Social Welfare Officer,
kanyakumari District.

## CIRCULAR

# போதையூட்டும் பொருட்கள்
# போதைநோய்கள்
# போதைநோய் நலமுறைகள்
# பட்டயப் பயிற்சி
# (Intoxicants - Addictions - Interventions Diploma Course)

மக்களின் இன்றைய வாழ்வுச் சூழல்களைக் கருத்திற்கொண்டு சமுதாயத்தை உற்று நோக்குகின்றபோது, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, வயது வரம்பின்றி எல்லா மக்களையும் பாதிக்கின்ற பிரச்சனைகளில் முதன்மையானதாகப் போதைக் கலாச்சாரம் இருக்கின்றது. துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், காரணம் தெரியாத புண்கள் ஆகியவற்றை உருவாக்கும் போதையூட்டும் "**மது தொண்டைக்குள் செல்லும்போது இனிமையாய் இருக்கும், பிறகோ பாம்புபோலக் கடிக்கும்**" என்பது உண்மை. ஆனாலும் பலரும் போதையினால் விளையும் பாதிப்புகளைப்பற்றித் தெளிவாக அறிந்திருப்பதில்லை, உணர்ந்திருப்பதில்லை, ஏன் நினைத்துப் பார்ப்பதில்லை.

எதார்த்தம் என்னவென்றால், யாருமே விரும்பி வேண்டுமென்றே போதைநோயாளியாவதில்லை. 'ஒரே ஒரு தடவை', 'இன்று ஒரு நாள் மட்டும்' என்று எதேச்சையாகவோ, வற்புறுத்தப்பட்டோ போதைக்குள் நுழைவது, போதைக்குள்ளேயே சிக்கிக் கொள்ளும் நிலைமைக்கு ஆளாக்கி விடுகின்றது.

'**மதுதானே குடிக்கிறேன்**' என்று போதையூட்டும் பொருட்களிலும் (Intoxicating Substances), '**இணையதளத்தில்தானே இருக்கிறேன்**' என்று போதையூட்டும் செயல்முறைகளிலும் (Intoxicating Processes), '**பிடித்தவரோடுதானே பழகுகிறேன்**' (Intoxicating Behaviors) என்று போதையூட்டும் நடத்தைகளிலும் பலரும் மாட்டித் தவிக்கின்றனர்.

இந்நிலை மாறிட, எந்தவிதமான போதைக்கும் யாருமே புதிதாக ஆளாகாமலிருக்கவும், ஏற்கெனவே ஆளானவர்கள் நிறுத்தவும், நிறுத்த இயலாதவர்கள் சிகிச்சை எடுக்கவும், சிகிச்சைக்குப்பின் தொடர்ந்து பராமரிக்கவும் வேண்டியிருக்கின்றது. இதற்குப் போதையை உளவியல் பின்னணியோடு அறிவியல் பார்வையுடன் தெளிவாகப் புரிந்துகொள்வது அத்தியாவசியமாகின்றது.

இதில் முதல் கட்டமாகப் போதையூட்டும் பொருட்கள் (intoxicating substances) சார்ந்த 20 வகுப்புகளைக் கொண்ட 100 மணிநேரப் பட்டயப் பயிற்சி ஒன்று தொடங்கவிருக்கின்றோம். போதைநோயியலில் முறையான பயிற்சியும், தேவையான தேர்ச்சியும், போதுமான அனுபவமும் பெற்றுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு இப்பயிற்சியை போதைநோய் நலப்பணியும், திருச்சிலுவைக் கல்லூரியும் இணைந்து நவம்பர் 6-ஆம் தேதி சனிக்கிழமையிலிருந்து திருச்சிலுவைக் கல்லூரியின் பன்னோக்கு அரங்கில் வைத்து நடத்தவிருக்கின்றோம். இப்பயிற்சியை முறைப்படி நிறைவு செய்பவர்களுக்குப் போதைநோய் நலப்பணியும், திருச்சிலுவை கல்லூரியும் இணைந்து வழங்கும் பட்டயமும், இந்தியன் நேச்சுரல் தெரபி கவுன்சில் பட்டயமும் (விரும்புபவர்களுக்கு), மத்திய அரசின் பட்டயமும் வழங்கப்படும்.

நமது மக்கள் எந்தவிதமான போதைக்கும் ஆளாகாமல் முழுநலத்தோடு வாழ்ந்திட இப்பயிற்சி உதவுகிறது. ஆகவே, இப்பயிற்சியில் ஆர்வமுடையோரும், இப்பணியில் ஈடுபாடுடையோரும் உங்கள் பெயர்களைத் திருப்புமுனை போதைநோய் நலப்பணியகத்தில் பதிவு செய்யவும்.

## போதையூட்டும் பொருட்களும் - போதைநோய்களும் - போதைநோய் நலமுறைகளும்

**பயிற்சி தொடங்கும் நாள் : நவம்பர் 6, 2021**

**பயிற்சி நடைபெறும் நாள் : சனிக்கிழமைதோறும் (20 வாரங்கள்)**

**பயிற்சி நடைபெறும் நேரம்: காலை 9.30 - மதியம் 1.00 வரை**

**பயிற்சி நடைபெறும் இடம்: பன்னோக்கு அரங்கம்**
**திருச்சிலுவை கல்லூரி**
**நாகர்கோவில்**

# பட்டயப் பயிற்சி காலஅட்டவணை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 6 (1) | 13 (2) | 20 (3) | 27 (4) | - |
| டிசம்பர் | 4 (5) | 11 (6) | 18 (7) | 25 கிறிஸ்மஸ் தேர்வு விடுமுறை | - |
| ஜனவரி | 1 புத்தாண்டு தேர்வு விடுமுறை | 8 (8) தேர்வு | 15 பொங்கல் விடுமுறை | 22 (9) | 29 (10) |
| பெப்ரவரி | 5 (11) | 12 (12) | 19 (13) | 26 (14) | - |
| மார்ச் | 5 தேர்வு விடுமுறை | 12 | 19 (15) இரண்டாம் தேர்வு | 26 (16) | - |
| ஏப்ரல் | 2 (17) | 9 (18) | 16 (புனித சனி) | 23 (19) | 30 (20) |
| மே | | | | 28 | - |
| ஜூன் | 4 நிறைவுத் தேர்வு | 11 | 21 | 25 உலகப் போதை விழிப்புணர்வு தினம் | - |
| ஜூலை | 2 பட்டமளிப்பு விழா | | 18 | - | - |

**தகவலுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**

J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன் MAC, MSW, PhD

இயக்குநர்

திருப்புமுனை போதைநோய் நலப்பணி, ஆயர் இல்ல வளாகம்

மருத்துவக் கல்லூரி சாலை, நாகர்கோவில் - 629 001

தொலைபேசி எண் : 04652 238425

அலைபேசி எண் : 94867 96009

Nasha Mukt Volunteer Training was given to the volunteers in Holy Cross College (Autonomous) Nagercoil on 05.02.2022. District Collector Mr. Aravind presided over the programme.



Diploma course on Drugs, types and drug Diseases was organised on November 20, 2021. Dr. Alvin Madhan Raj was the resource person.



Diploma course on Drugs, types and drug Diseases was organised on November 27, 2021. Dr. Seenu was the resource person




NASHA MUKT BHARAT CAMPAIGN
போதைப்பொருள் இல்லாத இந்தியா
குமரி மாவட்டம் - தமிழ்நாடு
போதையூட்டும் பொருட்கள் - போதைநோய்கள்
போதைநோய் நல முறைகள் - பட்டயப் பயிற்சி
தொடர்
நேரடி
வகுப்பு
4
பாடத் தலைப்பு
போதையூட்டும் பொருட்கள்:
வகைகள்
பயிற்சியாளர்
E. சீனு MSW,PhD
இணைப்பேராசிரியர்,மனநல சமூக
பணித்துறை நிம்ஹான்ஸ் பெங்களூரு
பயிற்சி நாள்:
நவம்பர் 27,2021,
பயிற்சி நடைபெறும் இடம்:
பல்நோக்கு அரங்கம், குருசடி,திருச்சிலுவை கல்லூரி,
நாகர்கோவில்
பயிற்சி தொடர்பிற்கு,
அருள்பணி
DR J.பிரான்சிஸ் சேவியர் நெல்சன்
இயக்குனர்,
திருப்புமுனை
போதைநோய் நலப்பணி நாகர்கோவில்.
94867 96009



Graduation ceremony was held in Holy Cross College (Autonomous), Nagercoil. The Superintendent of Police, Mr. Srinath presided over the function and distributed the certificates.



Minister of Information Technology Mr. Mano Thangaraj, released the newsletter on 04.12.2021 and gave a talk on Mental well-being.




மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள்,
நாகர்கோவில் குருசடி திருச்சிலுவை மகளிர் கல்லூரி பன்னோக்கு அரங்கத்தில்
இன்று (04.12.2021) நடைபெற்ற நிகழ்ச்சியில், "மனநல ஆற்றுப்படுத்துதல்" கையேட்டினை
வெளியிட்டு, பேசியபோது எடுத்தப்படம்.
உடன் நூலாசிரியர் அருட்பணி.நெல்சன் உட்பட பலர் உள்ளார்கள்.

## 2019-2020

### PERMISSION LETTER

# ADDICTION TREATMENT MINISTRY

**FOR AWARENESS, TRAINING AND INTERVENTION**
Bishop's House Campus, Nagercoil-629001
Kanyakumari District, Tamil Nadu
Mobile: 91-9486796009; Email: nlp2004fra@yahoo.com
Francis Xavier Nelson, MA, MAC, MSW, PhD, *Director*

Date: 11/11/2021

அ. புகழேந்தி MSc, MEd, MPhil, PhD
முதன்மைக் கல்வி அதிகாரி
கன்னியாகுமரி மாவட்டம்

அன்புள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களுக்கு,

"போதைப்பொருள் இல்லாத இந்தியா" (Nasha Mukt Bharat) அரசுத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்களை முறையாக வழிநடத்த ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படுகின்ற வகையில் "போதைப்பொருட்கள் - போதைநோய்கள் - போதைநோய் நலமுறைகள்" பட்டயப் பயிற்சியை ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

மாணவர்களின் இன்றைய வாழ்வுச் சூழல்களைக் கருத்தில்கொண்டு சமுதாயத்தை உற்றுநோக்கும்போது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கின்ற தவறுகளில் முதன்மையாக இருப்பது போதைக் கலாச்சாரம் என்று எளிதாகச் சொல்லிவிடலாம்.

மாணவர்கள் "ஒரு ஒரு தடவை", "இன்று ஒரு நாள் மட்டும்" என்று விரும்பியோ, விரும்பாமலோ போதைக்குள் நுழைவது, போதைக்குள்ளேயே சிக்கிக் கொள்ளும் நிலைமைக்கு ஆளாக்கி விடலாம். எனவே இத்தலைமுறையும் எந்தவிதமான போதைக்கும் ஆளாகாதவர்கள் இன்றும் நுழையாமல் தவிர்க்கவும், ஆளானவர்கள் இப்போதே நிறுத்தவும், நிறுத்த இயலாமல் தவிப்பவர்கள் சிகிச்சை எடுக்கவும், சிகிச்சைப் பெற்றவர்கள் தொடர்பராமரிப்பு கொடுத்து உதவவும் போதையை அறிவியல் பார்வையுடன், உளவியல் பின்னணியோடு புரிந்து கொள்வது அத்தியாவசியமாகிறது.

போதைக் கலாச்சாரத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் விதத்தில் நவம்பர் 6ஆம் தேதி தொடங்கி 20 சனிக்கிழமைகள் போதைநோயியலில் முறையான பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு திருச்சிலுவைக் கல்லூரி மற்றும் போதைநோய் நலப்பணியின் இணைந்த பட்டயமும், இந்திய இயற்கை மருத்துவ கவுன்சில் (Indian Natural Therapy Council) வழங்கும் பட்டயமும், மத்திய அரசின் திறன் சான்றிதழும் (Central Government Skill Certificate) கொடுக்கப்படும்.

இப்பயிற்சியில் பள்ளியிலிருந்து ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒன்றோ அல்லது இரண்டோ ஆசிரியரைப் பங்கெடுக்கச் செய்ய உங்களின் அனுமதியைக் கோருகின்றேன். பங்கெடுக்க விரும்புபவர்கள் தங்கள் பெயரை நவம்பர் 16ஆம் தேதிக்குள் (முனைவர் நெல்சன், போதைநோய் நலப்பணி, நாகர்கோவில். அலைபேசி: 9486796009, தொலைபேசி: 04652-238425) தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். பயிற்சிக்கான தகவல்கள் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உங்கள் அன்புள்ள

(பிரான்சிஸ் சேவியர் நெல்சன்)

## WORLD DRUG AWARENESS DAY -2019



Graduation ceremony was held in Holy Cross College (Autonomous), Nagercoil. Rev. Bishop Nazren Soosai and The Superintendent of Police, Mr. Srinath presided over the function and distributed the certificates.



தினமலர்

◆ நாகர்கோவில் ◆ திங்கள் ◆ 30 டிசம்பர் ◆ 2019

# ஹோலிகிராஸ் கல்லூரியில் பட்டய பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா

செம்பருத்திவிளை, டிச. 30 – நாகர்கோவில் ஹோலிகிராஸ் கல்லூரியில் மனித வளர்ச்சிப் பருவ ஆற்றுப்படுத்துதல் பட்டய பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

பிறக்கின்ற குழந்தையிலிருந்து முதிர்ந்த வயதினர் வரை தங்கள் வளர்ச்சி பருவங்களில் விரும்பியோ விரும்பாமலோ பலவித சமூக கலாச்சார அரசியல் பொருளாதார ஊடக தாக்கங்களுக்கு ஆளாகின்றனர். அந்தந்த பருவத்துக்குரிய வளர்ச்சியை ஒவ்வொரு மனிதரும் பெற்றிருக்க வேண்டுமென்பதற்காக ஹோலிகிராஸ் கல்லூரியில் மனித வளர்ச்சிக்கான ஆற்றுப்படுத்துதல் பயிற்சி 100 மணி நேர பயிற்சியில் 157 பேர் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றனர். சான்றிதழ் வழங்கும் விழாவில் கோட்டாறு மறைமாவட்ட பிஷப் நசரேன் சூசை பரிசு, நினைவு பரிசு வழங்கினார். மாவட்ட எஸ்.பி., ஸ்ரீநாத் 20 வார தொகுப்பு பயிற்சி வகுப்புகளின் தொகுப்பு குறுந்தகட்டை வெளியிட்டு பட்டய சான்றிதழ் வழங்கினார். மாவட்ட கல்வி அதிகாரி ராமன் 20 பயிற்சி வகுப்புகளின் சுருக்கத்தை வெளியிட்டு மத்திய அரசின் சான்றிதழை வழங்கினார். மாவட்ட குற்ற வழக்கு தொடர்பு துறை உதவி இயக்குநர் சேவியர் பாண்டியன் விழா நினைவு சிறப்பு பதக்கம் வழங்கினார். அரசு வக்கீல் ஞான சேகர் இந்திய இயற்கை மருத்துவ சங்கத்தின் சான்றிதழை வழங்கினார்.

விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியின் நேர்முக உதவியாளர் பிருந்தா, கோட்டாறு மறைமாவட்ட முதல்வர் ஹிலாரியுஸ், பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருள்ராஜ், ஹோலிகிராஸ் கல்லூரி செயலர் ஜெரால்டின் ஜெயம், துணை முதல்வர் லீமா ரோஸ் வாழ்த்தி பேசினர்.

ஏற்பாடுகளை கோட்டாறு மறைமாவட்ட ஆற்றுப்படுத்துதல் பணிக்குழு இயக்குநர் பிரான்சிஸ் சேவியர் நெல்சன், கல்லூரி முதல்வர் ஆனி பெர்பெட் சோபி, செய்தி தொடர்பாளர் அருள் குமரேசன் செய்திருந்தனர்.



ஹோலிகிராஸ் கல்லூரியில் பட்டய பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

நாகர்கோவில் 28–12–2019 ★ ★ ★

மாலைமலர்



மனித வளர்ச்சிப் பருவ ஆற்றுப்படுத்துதல்

# பட்டயப்பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா

நாகர்கோவில், டிச. 28– மனித வளர்ச்சிப் பருவ ஆற்றுப்படுத்துதல் பட்டயப் பயிற்சியின் சான்றிதழ் வழங்கும் விழா நாகர்கோவில் திருச்சிலுவை கல்லூரியில் நடைபெற்றது.

கோட்டார் மறைமாவட்ட ஆற்றுப்படுத்துதல் பணியும், திருச்சிலுவை கல்லூரியும் இணைந்து ஆற்றுப்படுத்துதல் துறையில் முறையான பயிற்சியும், தேவையான தேர்ச்சியும், போதுமான அனுபவமும் பெற்றுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு இந்த 100 மணிநேர பயிற்சியை 20 வாரங்களாக நடத்தினர்.

கடந்த 10 மாதகாலமாக நடந்த 20 வகுப்புகளில் கலந்து கொண்டு அதற்குரிய தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. மாவட்ட போலீஸ்சூப்பிரண்டு ஸ்ரீநாத் 20 வார பயிற்சி வகுப்புகளின் தொகுப்பு குறும்தகட்டை வெளியிட்டு, பயிற்சிபெற்றவர்களுக்கு பதக்கம் அணிவித்து, பட்டயச் சான்றிதழை வழங்கினார். மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி ராமன் 20 பயிற்சி வகுப்புகளின் சுருக்கத்தை வெளியிட்டு மத்திய அரசின் சான்றிதழை வழங்கினார்.

மாவட்ட குற்ற வழக்கு தொடர்புதுறை உதவி இயக்குனர் சேவியர் பாண்டியன் விழா நினைவு சிறப்புப் புத்தகத்தை பயிற்சிபெற்றவர்களுக்கு வழங்கினார். அரசு வக்கீல் ஞானசேகர் இந்திய இயற்கை மருத்துவ சங்கத்தின் சான்றிதழை வழங்கினார். கோட்டார் மறைமாவட்ட ஆயர் நசரேன் தலைமை தாங்கி சிறப்பு மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியின் நேர்முக உதவியாளர் பிருந்தா, கோட்டார் மறைமாவட்ட முதன்மைப் பணியாளர் கிலேரியஸ், கேட்டார் மறைமாவட்ட அருட்பணி குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருள்ராஜ், திருச்சிலுவை கல்லூரியின் செயலர் ஜெரார்டின் ஜெயின், திருச்சிலுவை கல்லூரியின் துணை முதல்வர் லீமா ரோஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

157 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்ட இச் சிறப்பு நிகழ்ச்சியை கோட்டார் மறைமாவட்ட ஆற்றுப்படுத்துதல் பணியின் இயக்குனர் பிரான்சிஸ் சேவியர் நெல்சன் மற்றும் திருச்சிலுவை கல்லூரியின் முதல்வர் ஆனி பெர்பெட் சோபி, செய்தி தொடர்பாளர் டாக்டர் அருள்குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர்.